# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590


**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,
மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 625/E/2019**

திரு.பா.சின்னச்சாமி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 08.11.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் சென்னை-5, நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தற்போதைய விருதுநகர் மாவட்டம், இராசபாளையம் வட்டம், 1901-க்கு திருநெல்வேலி மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், இனாம் ரெகுநாதபுரம் (எஸ்டேட்) கிராமம், இனாம் அடங்கல் எண்கள் 381, 477, 478 மற்றும் 478 கிணறு, 495-க்கு (UDR) சர்வே எண்களுடன் செட்டில்மெண்ட் நகல், அரசாணை நிலை எண்.2302 (வருவாய்), 1.9.195-ன்படி ரெகுநாதபுரம் (எஸ்டேட்) ரயத்துவாரி மாறிய ஆணையின்படி வருவாய் கிராமத்தில் ஹெக்டேர் அளவு, நஞ்சை, புஞ்சை, நத்தம், புறம்போக்கு மற்றும் பட்டாதாரர்கள் விபரம், அவர்களுக்குரிய நிலங்களின் அளவுகள் ஆகியவற்றை 2 இனங்களில் தகவலாக வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 14.11.2019 தேதியிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரின் மனுவை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றுதலில் அனுப்பி வைத்திட, அவர் 18.12.2019 தேதியிட்ட கடிதத்தில் தகவல் வழங்கியுள்ளது போதிய தகவல் அல்ல என்று தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 23.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு செய்திட, அவர் 06.01.2020 தேதியிட்ட கடிதத்தில் பொதுத் தகவல் அலுவலரின் 18.12.2019 தேதியிட்ட கடிதத்தில் தகவல் வழங்கியுள்ளதாக

தெரிவித்துள்ளது உரிய தகவல் அல்ல என்றும், தான் கோரிய தகவலை வழங்கிட உத்திரவிடக் கோரியும், 17.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட்ட இருந்த நிலையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 20.10.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் 08.10.2020 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தகவல்களை பெற்றுக் கொண்டு ஏற்பளிப்பு செய்துள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் தகவல்களை பெற்றுக் கொண்டதாக ஏற்பளிப்பு செய்த அளித்த கடிதத்தின் நகலை இணைத்து அனுப்பியுள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டு ஏற்பளிப்பு செய்துள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 625/E/2020**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.

திரு.பா.சின்னச்சாமி த/பெ.பா.பாண்டியன்,
481 இனாம் செட்டிகுளம்,
இராசபாளையம்-626 117,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File
RJ/PS 03.11.2020